TNVR010023052024

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :– திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ம் நாள் சனிகிழமை

**Pauper OP.No.64/2019**

1. வே.ஜெயலட்சுமி
2. பா.மனோரஞ்சிதம் ... மனுதாரர்கள்

–எதிர்–

1) வே.வீரப்பன்
2) சி.பிச்சைக்கனி
3) இணை சார்பதிவாளர் நிலை–1,
இணை சார்பதிவாளர் 1 அலுவலகம்,
விருதுநகர்.
4) தமிழ்நாடு அரசு,
விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர், மூலமாக
... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த அசல் மனுவானது என் முன்பாக 23.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சங்கர்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கு.வீராசாமி அவர்கள் முன்னிலையாகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மாவட்ட அரசு வழக்கறிஞர் திரு.C.அன்னக்கொடி அவர்கள் முன்னிலையாகியும் மனுதாரர்கள், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தையும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு எ.ம.சா.ஆ.1 ஆவணத்தையும், இருதரப்பு வாதுரையும் மேற்கொள்ளப்பட்டு இது நாள் வரை இம்மன்ற பரிசீலனையிலிருந்தும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம், சான்றாவணம் இல்லை என்பதை எடுத்துரைத்தும் பரிசீலித்தும் இன்று இந்த அசல் மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>உத்தரவு</u>

1) மனுதாரர்கள்/வாதிகளை வறியவர்களாக அங்கீகரித்துக் கொண்டும், பிராது தபசில் சொத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், கடந்த 12.07.2016 ம் தேதி மனுதாரர்கள்/வாதிகள், 1 ம் பிரதிவாதிக்கு, 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் 2261/2016 ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட ஆவணமாக எழுதிக் கொடுத்துள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை இரத்து செய்து உத்தரவிடக்கோரியும் 1ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதிக்கு கடந்த 12.07.2017 ம் தேதி 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் 1172/2017 ம் எண்ணாக பதிவு செய்யப்பட்டு மோசடியாக, எழுதிக் கொடுத்துள்ள அடமானப்பத்திரமானது செல்லத்தக்கதல்ல, இவ்வாதிகளை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்யக்கோரியும் இம்மனு மற்றும் இம்மனுவின் செல்வுத் தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளை செலுத்த சொல்லி உத்தரவிடக்கோரியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 6 விதி 14(A) உ/இ வகுமுறை 33 விதி 1 மற்றும் பிரிவு 151 சி.பி.சி–ன் கீழ் மனுதாரர்களால் இந்த அசல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

– – – – –

2) **மனுவின் சுருக்கம்**

வழக்கிடைச் சொத்தின் மொத்த விஸ்தீரணமானது ஏக்கர் 3 செண்டு 54 ஆகும். வழக்கிடை சொத்தின் மொத்த விஸ்தீரணமான ஏக்கர் 3 செண்டு 54 புஞ்சை நிலத்தை, வாதிகளின் தந்தையான வேலு அவர்கள், இவ்வாதிகளுக்கும், வாதிகளின் மூத்த சகோதரியான சி.சண்முகத்தாய் அவர்களுக்கும் கடந்த 24.05.2012 ம் தேதி, 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் 1738/2012 ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் பாத்தியப்படுத்தி எழுதிக் கொடுத்துள்ளார். க்ஷ தானசெட்டில்மெண்டை க்ஷ வாதிகளும் அவர்களது மூத்த சகோதரியும் ஏற்றுக்கொண்டு, வழக்கிடைச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள். வழக்கிடைச் சொத்தின் மொத்த விஸ்தீரணமான 3 ஏக்கர் 54 செண்டில் வாதிகளுக்கு பிரிவினையின்றி 2/3 பாகம் உள்ளது. 1 ம் பிரதிவாதி, வாதிகளின் உடன்பிறந்த சகோதரர் ஆவார். வாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட வழக்கிடைச் சொத்தைப் பொறுத்து, 1 ம் பிரதிவாதிக்கு கடந்த 22.04.2016 ம் தேதி, 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் 1358/2016 ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட ஒரு ஜெனரல் பவர் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்திருந்தார்கள். ஆனால் வாதிகளுக்கு தெரியாமல் வழக்கிடைச் சொத்தினை கிரையம் செய்வதற்கு முயற்சி செய்ததால், வாதிகள் க்ஷ 1 ம் பிரதிவாதியை கண்டித்ததுடன், சுடி ஜெனரல் பவர் பத்திரத்தை ரத்து செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யும்படியும், அதே போல் வாதிகளின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரித்து தரும்படியும் கூறினார்கள்.

அதனைத் தொடர்ந்து க்ஷ 1ம் பிரதிவாதி கடந்த 10.07.2019ம் தேதி வாதிகளை அணுகி, வாதிகள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்திருந்த க்ஷ 22.04.2016ம் தேதிய ஜெனரல் பவர்பத்திரத்தை ரத்து செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும், தாயார் சொத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கும் ஆவணங்கள் தயார் செய்து வைத்திருப்பதாகவும், 12.07.2016ம் தேதியன்று 3ம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகம் வந்து கையெழுத்து போட்டுச் செல்லுமாறு கூறினார். 1ம் பிரதிவாதியின் வார்த்தையை நம்பி எழுதப்படிக்க தெரியாத வாதிகள் கடந்த 12.07.2016ம் தேதியன்று 3ம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகம் சென்று 1ம் பிரதிவாதி தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் கையெழுத்து செய்து விட்டு திரும்ப வந்து விட்டார்கள். 1ம் பிரதிவாதி, வாதிகள் கையெழுத்து செய்த ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதனை படித்துக் கூட காட்டவில்லை. அதனைத் தொடர்ந்து கடந்த 16.09.2017ம் தேதியன்று 1ம் பிரதிவாதி, வாதிகள் வழக்கிடைச் சொத்தினை எழுதிக் கொடுத்துவிட்டார்கள், அவர்களுக்கு இனி உரிமையில்லை என்று, வாதிகள் எழுதிக் கொடுத்ததாக ஒரு தானசெட்டில்மெண்டை காட்டிக் கொண்டு, வாதிகளிடமும், மற்றவர்களிடமும் பிரஸ்தாபம் செய்தார். அப்போது தான் எழுதப்படிக்கத் தெரியாத வாதிகளிடம், தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரித்து தருவதாகவும், ஜெனரல் பவர் பத்திரத்தை ரத்து செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து, அவர்களிடமிருந்து மோசடியாக, 12,07.2016ம் தேதி 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் 2261/2016ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மென்ட் எழுதி பெற்றுள்ளார் என்ற விபரம் தெரிய வந்தது. மேலும் மனுதாரர்கள்/வாதிகளிடமிருந்து பெற்ற 22.04.2016ம் தேதிய ஜெனரல் பவர்பத்திரத்தை ரத்து செய்வதற்கு, மனுதாரர்கள்/வாதிகளிடமிருந்து கையொப்பங்கள் பெற்று கூடி 12.07.2016ம் தேதியில் ஆவண எண்2260/2016ன் மூலமாக, 1ம் பிரதிவாதி ஜெனரல் பவர்பத்திரத்தை ரத்து செய்யவும் வைத்துள்ளார். அவ்வாறு தெரிந்தவுடன் வாதிகள் அதிர்ச்சியடைந்தார்கள். உடனடியாக மனுதாரர்கள்/வாதிகள் கடந்த 18.09.2017ம் தேதியன்று விருதுநகர் மாவட்ட பதிவாளர் அலுவலரிடம் நேரில் சென்று புகார் மனு கொடுத்து ஆட்சேபளையை தெரிவித்து உள்ளார். மேலும் வாதிகள் வழக்கிடைச் சொத்தை பற்றி, 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் நேரில் சென்று விசாரித்த போது, 1ம் பிரதிவாதி வழக்கிடைச் சொத்தை மேலும் வில்லங்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், ஷை 1ம் பிரதிவாதி ஏதோ 2ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.1,00,000/-ம் கடன் பெற்றதாக பொய்யான சங்கதியைக் கூறி 2ம் பிரதிவாதிக்கு கடந்த 12.07.2017ம் தேதி 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் 1172/2017ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட ஒரு அடமானப்பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ள விபரமும் தெரிய வந்தது. ஷை 1, 2 பிரதிவாதிகள் வழக்கிடைச் சொத்தை வில்லங்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் மோசடியாக அடமானப்பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அடமானப்பத்திரமானது சரியான மறுபயனுடன் ஏற்படவில்லை. 1ம் பிரதிவாதி, வாதிகளிடமிருந்து மோசடியாக பெற்ற 12.07.2016ம் தேதிய தானசெட்டில்மெண்டை வைத்துக் கொண்டு, வழக்கிடைச் சொத்திற்குரிய பட்டாவை, அவரது பெயருக்கு மாற்றுவதற்கு முயற்சி செய்தார். அது பற்றி தெரிந்தவுடன், 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யக் கூடாது என்று ஆட்சேபனை செய்து, விருதுநகர் வருவாய் வட்டாட்சியரிடம் 2ம் வாதி கடந்த 14.06.2018ம் தேதி மனுக்கொடுத்தார். மனுதாரர்கள்/வாதிகள் வசதியற்ற வறியவர்களாக இருப்பதால், 1ம் பிரதிவாதி மனுதாரர்கள்/வாதிகளை ஏமாற்றி பெற்ற 12.072016ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை இரத்து செய்து உத்தரவிடக் கோரி 1ம் மனுதாரர் / 1ம் வாதி. விருதுநகர், இலவச சட்ட உதவி மையத்தில் கடந்த 28.02.2018ம் தேதி மனு கொடுத்தார்கள். ஆனால் ஷை மனுவின் மீது விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வாதிகள் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆவார்கள். அவர்களுடைய வயிற்று ஜீவனத்திற்கு தவிர வேறு வருமானம் ஏதும் இன்றி வறுமையில் வாழ்ந்து வருகிறார்கள். வாதிகளின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு பிரித்து தராமல் அவரது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு பிரச்சினை செய்து வருகிறார். வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தும் தாவா சொத்தாக இருக்கிறது. எனவே தபசில் சொத்தை விற்று பணமாக்க முடியாத சூழ்நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் இருக்கிறார்கள். நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கு மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித வசதியும் இல்லை. எனவே மனுதாரர்கள்/வாதிகளை வறியவர்களாக அங்கீகரிக்க வேண்டும் என இம்மனு தாக்கலாயிற்று.

3) **1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம்**

மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்யும் பொழுது தங்களுக்கு பாத்தியப்பட்ட அசையும மற்றும் அசையா சொத்துக்களை பட்டியலிடப்பட்டு சரிபார்த்து கையொப்பமிட்டு இருக்க வேண்டும். ஆனால் மனுதாரர்கள்/வாதிகள் தபசில் சொத்தினை மட்டுமே பட்டியலிட்டு காட்டி தங்களுக்கு பாத்தியப்பட்ட மற்ற அசையும், அசையா சொத்துக்களை மறைத்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளனர். மேலும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மதிப்பினையும் குறிப்பிடவில்லை. உண்மையில் 1ம் மனுதாரர்/1ம் வாதி கோவில்பட்டியில் அன்பு என்பவருடன் திருமணம் செய்து வைக்கப்பட்ட போது அவருக்கு சீதனமாக 4 பவுன் நகைகளும் மற்ற பண்ட பாத்திரங்களும் வழங்கப்பட்டது. மேலும் 1ம் மனுதாரர்/ 1ம் வாதி ஷை அன்பு என்பவருடன் விவாகரத்து பெற்று தற்போது வரை ஜீவனாம்ச தொகை பெற்று வருகிறார். 2ம் மனுதாரர்/2ம் வாதிக்கு திருமணத்தின் போது 4 பவுன் தங்க நகை சீதனமாக வழங்கப்பட்டது. மேலும் 2ம் மனுதாரர்/2ம் வாதியின் கணவர் டிரைவராக பணிபுரிந்து வருகிறார். மேலும் மாமனார், மாமியாருடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருவதால் குடும்ப செலவு முழுவதையும் அவரின் கணவரும், மாமனாருமே பார்த்து வருகின்றனர். மேலும்

2ம் மனுதாரர்/2ம் வாதி தான் உழைப்பின் மூலமாக வரும் ஊதியத்தை முழுவதுமாக தானே வைத்து கொண்டு வட்டி தொழில் செய்து வருகிறார். மேலும் வாதிகள்/பிரதிவாதிகள் தங்களது மனுவில் தங்களது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும்பாத்தியப்பட்ட சொத்து உள்ளதாக கூறியுள்ள நிலையில் அதனை தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் பட்டியலில் குறிப்பிடவில்லை. கடந்த 2017ம் ஆண்டு வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை வாதிகளின் மூத்த சகோதரி மற்றும் வாதி 1ம் பிரதிவாதிகளின் தந்தையின் பாகம் போக மீதி சொத்தினை 346/2017 என்ற கிரைய ஆவணம் மூலம் 13.03.2017ம் தேதியன்று காளிஸ்வரி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தனர். கிரைய தொகையை முழுவதையும் வாதிகளே பெற்றுக் கொண்டுள்ளனர். தங்கேஸ்வரன் ஆகியோர் 1ம் பிரதிவாதி கூறியதன் பேரில் வாதிகளுக்காக 1ம் பிரதிவாதி, சண்முகவேல், ஷை கிரைய தொகையை விட்டுக் கொடுத்துள்ளனர். ஷை கிரைய தொகை முழுவதும் வாதிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. அந்த தொகையை வட்டி தொழில் செய்து வருகின்றனர். மேலும் வாதிகள் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் செய்து கொடுத்ததின் பேரில் கிடைத்த தொகையினையும் மற்றும் 1ம் பிரதிவாதியிடமிருந்து அவ்வப்போது பெற்ற தொகையையும் வட்டிக்கு விட்டு லேவாதேவி தொழில் செய்து வருகிறார்கள். அதன் மூலம் நல்ல வருமானம் ஈட்டி வருகிறார்கள். அந்த உண்மையை மறைத்து தங்களை வறியவர்கள் போல் காட்டிக் கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் உண்மையில் வறியவர்கள்கிடையாது. அவர்கள் நீதிமன்ற கட்டணத்தை செலுத்தும் அளவிற்கு நல்ல நிலையில் உள்ளனர். எனவே தான் கனம் நீதிமன்றத்தில் தாங்கள் வறியவர்கள் என்பதற்காக எவ்வித சான்றிதழையும் தாக்கல் செய்யவில்லை. எனவே இந்த காரணத்திற்காகவே வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவானது தள்ளுபடி செய்யதக்கதாகும். மனுதாரர்கள்/வாதிகளுக்கு திருமணத்தின் போது சீதனமாக கொடுக்கப்பட்ட நகைகளின் மதிப்பு தற்போது தோரயமாக ரூ.2,00,000/-ஆகும். மேலும் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை விற்றதின் மூலமாக கிரைய தொகையை மனுதாரர்கள்/வாதிகளே வைத்துள்ளார்கள். ஷை தொகையை வட்டி தொழில் செய்து ஒரு குறிப்பிட்ட தொகையை கையில் வைத்துள்ளனர். மேலும் மேற்கண்ட அசையும் சொத்துக்களையும் அசையா சொத்துக்களையும் தங்களது மனுவில் பட்டியலிட்டு காட்டாமல் வெறுமன தபசில் சொத்தினை மட்டுமே தங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவானது ஆர்டர் 33 ரூல் 2, 3ல் கூறப்பட்டுள்ள விதிகளை பூர்த்தி செய்யாத காரணத்தினாலும் மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்ற கட்டணத்தை செலுத்தும் அளவிற்கு போதுமான வசதியுடன் உள்ள காரணத்தினாலும் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்து செலவுத் தொகையினை பிரதிவாதிகளுக்கு, வாதிகள் வழங்க வேண்டுமென தாக்கலாயிற்று.

**4) 3, 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம்**

மனுதாரர்கள்/வாதிகள், பிராது தபசில் கண்ட சொத்தானது தங்களுக்குப் பாத்தியப்பட்டதாகக் கூறி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பிராது தபசில் கண்டுள்ள சொத்து தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்பதை மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். மனுதாரர்கள்/வாதிகள் மிகவும் ஏழ்மையானவர்கள் என்றும், அவர்களுடைய வயிற்று ஜீவனத்திற்கு தவிர வேறு வருமானம் ஏதும் இன்றி வறுமையில் வாழ்கிறார்கள் என்றும்,மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றக் கட்டணம் செலுத்துவதற்கு வசதியில்லை என்றும், பிராது பாரா 10ல் கூறப்பட்டுள்ள சங்கதிகளை ஆட்சேபிக்கப்படுகிறது. மனுதாரர்கள்/வாதிகள் தான் தங்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை மறைத்து தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே மனுதாரர்கள்/வாதிகளின் தாவா மனுவை 3, 4 எதிர்மனுதாரர்கள் பக்க செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து வேண்டுமென தாக்கலாயிற்று.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) மனுதாரர்களை வறியவர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டுமா?

2) மனுதாரர்கள் மனுவில் கோரிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?

3) மனுதாரர்களுக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன?

5) இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரரே ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர்கள் தரப்பில் ஆவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரே எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எ.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் இந்த நீதிமன்றத்தால் பரிசீலனை செய்யப்பட்டு, கவனத்தில் கொள்ளப்பட்டது. மனுதாரர்கள், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் ஆகியவை இந்நீதிமன்றத்தால் பரிசீலனை செய்யப்பட்டது.

7) **<u>தீர்வு</u>**

(7–i) மனு உரையிலிருந்தும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையிலிருந்தும் மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் சாட்சியம் மற்றும் எ.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கும் பொழுதும் மனுதாரர்களுக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையிலான உறவு முறைகளை பொறுத்தும் இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

(7–ii) மனுவில் உள்ள 1ம் மனுதாரருக்கும் ஒரு அன்பு என்பவருக்கும் 2004 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்று 2007 ஆம் ஆண்டு நீதிமன்றம் மூலமாக விவாகரத்து ஏற்பட்டுவிட்டது என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. அவர்களுக்கு குழந்தை ஏதும் பிறக்கவில்லை என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. மனுவில் உள்ள 2ம் மனுதாரர், 1ம் மனுதாரரின் இளைய சகோதரி என்பதும் அவருடைய கணவர் வாகன ஓட்டுனராக உள்ளார் என்பதும் அவர் அருப்புக்கோட்டையில் வசிக்கிறார் என்பதும் இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. மனுதாரர்கள் மற்றும் ஒரு பெண் குழந்தை சண்முகத்தாய் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் தகப்பனார் பெயர் வேலு என்பதாகும். தாயார் பெயரை பொறுத்து இருதரப்பிலும் சொல்லிக்கொள்ளப்படவில்லை.

(7–iii) தற்பொழுது இந்த மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கோரியுள்ள பரிகாரத்தை காணும் பொழுது மனுதாரர்கள்/வாதிகளை வறியவர்களாக அங்கீகரித்துக் கொண்டும், பிராது தபசில் சொத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், கடந்த 12.07.2016ம் தேதி மனுதாரர்கள்/வாதிகள், 1ம் பிரதிவாதிக்கு, 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் 2261/2016ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட ஆவணமாக எழுதிக் கொடுத்துள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை இரத்து செய்து உத்தரவிடக்கோரியும் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு கடந்த 12.07.2017ம் தேதி 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் 1172/2017ம் எண்ணாக பதிவு செய்யப்பட்டு மோசடியாக, எழுதிக் கொடுத்துள்ள அடமானப்பத்திரமானது செல்லத்தக்கதல்ல, இவ்வாதிகளை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்யக்கோரியுள்ளார்கள்.

(7–iv) மேலும் உபயதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியான மனுவில் கண்ட சொத்தான 3 ஏக்கர் 54 செண்ட் தந்தையார் வேலு என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதாகும். ஷை சொத்தை பொறுத்து தந்தை வேலு என்பவர் தன்னுடைய 3 பெண் மக்களுக்கு 24.05.2012 ஆம் ஆண்டு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. தற்பொழுது மனுதாரர்கள் தரப்பில் மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களை பொறுத்து பரிகாரம் கோரும் பொழுதும் அதற்கான ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் போன்று எதையும் தாக்கல் செய்யப்படவில்லை.

(7–v) மனு விசாரணை சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரை எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எ.சா.ஆ.1 ஆன 13.03.2017 ஆம் தேதியிட்ட

கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளார். ஷை கிரைய ஆவணத்தில் கண்ட முழுத் தொகையையும் மனுதாரர்கள்/வாதிகளுக்கு 1ம் எதிர்மனுதாரர் விட்டு கொடுத்துவிட்டதாகவும் ஷை தொகையை கொண்டு வாதிகள் வட்டி தொழில் செய்து வருவதாக 1ம் எதிர்மனுதாரர் சொல்லும் பொழுது அதனை மனுதாரர்கள் தரப்பில் முற்றிலுமாக மறுக்கப்படுகின்றது. மேற்காணும் சங்கதிகளை 1ம் எதிர்மனுதாரர் நிரூபணம் செய்து கொள்ளவில்லை. மேலும் 2017 ஆம் ஆண்டு 1ம் மனுதாரரும், அவரது மூத்த சகோதரி சண்முகத்தாயும் சேர்ந்து 1ம் எதிர்மனுதாரருக்கு 2017 ஆம் ஆண்டு ஒரு செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக 1ம் எதிர்மனுதாரர் கூறும் பொழுது அதனை மனுதாரர்கள் தரப்பில் மறுக்கும் பொழுதும் 1ம் எதிர்மனுதாரர் கூறும் சங்கதிகளை தகுந்த சாட்சியம் மூலமாக விசாரித்து கொள்ளப்படவில்லை. அதனை நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் 1ம் மனுதாரரும் அவரது மூத்த சகோதரியும் சேர்ந்து அவர்களின் அம்மாவின் பாக சொத்தை காளீஸ்வரி என்பவருக்கு கிரையமாக கொடுக்கப்பட்டது என்று 1ம் எதிர்மனுதாரர் கூறிக்கொள்ளும் சங்கதிகளை மனுதாரர்கள் மறுக்கும் பொழுது அதனை 1ம் எதிர்மனுதாரர் தகுந்த சாட்சியம் மற்றும் ஆவணம் மூலமாக நிரூபணம் செய்து கொள்ளப்படவில்லை.

(7–vi) மேலும் குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகம் ஏற்பட்டுவிட்டது என்றும் 1ம் எதிர்மனுதாரர் கூறும் பொழுது அதனை மனுதாரர்கள் தரப்பில் மறுக்கும் பொழுது அது குறித்தும் 1ம் எதிர்மனுதாரர் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணம் மூலம் நிரூபணம் செய்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் 16.09.2017 ஆம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் பெயருக்கு மனுதாரர்கள் செட்டில்மென்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துவிட்டதாக 1ம் எதிர்மனுதாரர் கூறுவதை மனுதாரர்கள் மறுக்கும் பொழுது அதனையும் தகுந்த சாட்சியம் மற்றும் ஆவணம் மூலமாக 1ம் எதிர்மனுதாரரால் நிரூபணம் செய்யப்படவில்லை.

(7–vii) தற்பொழுது மனுதாரர்கள் தரப்பிலும், 12.07.2016 ஆம் தேதியிட்ட தானசெட்டில்மென்ட் ஆவணத்தையும் பவர் ரத்து பத்திரம் பொறுத்தும் ஆட்சேபணையாக இம்மனுவின் மூலமாக சொல்லும் பொழுது ஷை 1ம் எதிர்மனுதாரர் கூறும் ஆவணங்களின் உண்மை தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவைகளையும் ஷை ஆவணங்கள் மனுதாரர்களை கட்டுப்படுத்தும் என்பதையும் 1ம் எதிர்மனுதாரரால் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாகும்.

(7–viii) தற்பொழுது மனுவில் கோரிய பரிகாரமான மனுதாரர்கள்/வாதிகளை வறியவர்களாக விளம்புகை செய்ய வேண்டி பரிகாரம் கோரும் பொழுது மனுதாரர்கள் வசதி வாய்ப்பு உடையவர்கள் என்பதையும்

நீதிமன்ற முத்திரைக் கட்டணம் செலுத்த வசதி உடையவர்கள் என்பதையும் பொறுத்து மனுதாரர்களால் தகுந்த சாட்சியம் மற்றும் ஆவணம் மூலமாக நிரூபணம் செய்யப்படவில்லை என்தையும் 1ம் மனுதாரர் கூலி வேலை மூலமாக மாதம் ஒன்றுக்கு ரூ.3,000/- வரை சம்பாத்தியம் செய்வதாகவும் சாட்சியம் அளிக்கும் பொழுதும் 2ம் மனுதாரரும் வீட்டு வேலை செய்து கொண்டும் அவரது கணவர் வாகன ஓட்டுனராக இருந்து வரக்கூடிய சூழலில் மனுதாரர்கள் இம்மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்ய விரும்பும் பொழுது மைஷ ஆவணங்களின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை ஆகியவைகள் இருதரப்பு சாட்சியங்கள், ஆவணங்கள் மூலமாக தான் தீர்மானிக்க இயலும் என்பதாலும் அந்த வகையில் இம்மனுவை அனுமதிக்கக் கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் பிரச்சனை எண் 1க்கு விடை காண்கிறது.

முடிவில், இம்மனுவை அனுமதித்தும் மனுதாரர்களை வறியவர்களாக விளம்புகை செய்தும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அசல் வழக்கை மேற்கொள்வதற்கும் உரிமை வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் நேரிடையாக கூறப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி**

ம.சா.1 திருமதி.ஜெயலட்சுமி (1ம் மனுதாரர்)

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி**

எ.சா.1 – திரு.வீரப்பன் (1ம் எதிர்மனுதாரர்)

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்**

எ.சா.ஆ.1 – 13.03.2017 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல்

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

*Additional District Court*
*Srivilliputhur,*
*Pauper* OP.No.64/2019
***<u>Draft / Fair - Judgment</u>***
*Dated : 18.04.2026*

Pauper **OP.No.64/2019, Date : 18.04.2026**

Orders is pronounced. As a result the petition is allowed. No costs. And the petitioners are declared as of now as Pauper and indigent persons and they are permitted to proceed further in the suit as far as their other claim is concerned. And the Registry is ordered to submit the records before the Hon'ble Principal District Court for assigning a suit number and to proceed further.

Additional District Judge,
Srivilliputhur.